**ASSOCIATION OF ACCOUNTING TECHNICIANS OF SRI LANKA**

# பரீட்சகர் அறிக்கை

## AA3 பரீட்சை – ஜலை 2016

## *(AA32) MANAGEMENT ACCOUNTING AND FINANCE*

முகாமைக் கணக்கியலும் நிதியும்

---

**<u>மேலோட்டம்</u>:**

இந்த விகாப் பத்திரம் 100 புள்ளிகளை அடக்கிய மூன்று பிரிவுகளை கொண்டுள்ளது.

1. பிரிவு **A :** 20 புள்ளிகளுக்கு நான்கு கட்டாய வினாக்களை கொண்டது.
2. பிரிவு **B :** 30 புள்ளிகளுக்கு மூன்று கட்டாய வினாக்களை கொண்டது.
3. பிரிவு **C :** 50 புள்ளிகளுக்கு இரண்டு கட்டாய வினாக்களை கொண்டது.

**பொதுவான கருத்து:**

இந்தப் பாடத்தில் பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த செயற்பாடு திருப்திகரமானதாக இல்லை. சில பரீட்சார்த்திகள் ஓரளவு நல்ல புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

**பிரிவு A** க்கு பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்துள்ளனர்.

பாடப் புத்தகத்தில் **பிரிவு B** யிலுள்ள வினாக்களை ஒத்த வினாக்கள் உதாரணங்களாக விளக்கப்பட்டுள்ளபோதிலும், பரீட்சார்த்திகளின் பெறுபேறு திருப்திகரமானதாக இல்லை.

**பிரிவு C** க்கு பரீட்சார்த்திகள் திருப்திகரமாக விடையளித்துள்ளனா.

---

## <u>பிரிவு A</u>

## வினா இல. 01

இந்த வினாவில் தனிப்பட்ட நிதித் திட்டமிடல் பற்றி பரீட்சிக்கப்பட்டது. “தனிப்பட்ட பாதீடு„ என்றால் என்னவென விபரிக்கும்படியும், தனிப்பட்ட நிதித் திட்டமிடல் அனுகூலங்கள் இரண்டை (2) கூறும்படியும் கேட்கப்பட்டது. மொத்தப் புள்ளிகள் 5.

**பெறுபேறு:**

இந்த வினாவுக்கான ஒட்டுமொத்தப் பெறுபேறு சாதகமாக உள்ளது.
அனேக பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அரைப்பங்கிற்கு மேலாக பெறமுடிந்தது.

**பொதுவான தவறுகள்:**

பகுதி (a) க்கு விடையளித்தலில் சில பரீட்சார்த்திகள் பொருள்வரையறையில் அடக்கப்பட்டுள்ள சேமிப்பு மற்றும் கடன் மீள்கொடுப்பனவு பற்றி குறிப்பிட தவறியுள்ளனர்..

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

அறிவினை புத்தூட்டுவதற்கு சுயகற்கைப் பாடப்புத்தகம் மற்றும் புதினப் பத்திரிகை வியாபாரச் செய்திகள் மற்றும் வியாபாரச் சஞ்சிகைகள் போன்ற தொடர்புபட்ட பந்திகளை வாசிக்கவும்.

## வினா இல. 02

இந்த வினாவின் பகுதி (a) யில் காசுப் பற்றாக்குறைக்கு சாத்தியமான காரணங்களை இனம் காணும் இயலுமையும், பகுதி (b) யில் காசு மிகையை அடைவதற்கு தந்திரோபாயங்கள் / முறைகள் பற்றியும் வினவப்பட்டது.

**பெறுபேறு:**

இது கோட்பாடுகளின் அடிப்படையிலான ஒரு இலகுவான வினா. அளிக்கப்பட்ட விடைகள் திருப்திகரமாக இருந்தன. சில பரீட்சார்த்திகள் காசுப் பற்றாக்குறைக்கு சாத்தியமான காரணங்களை எழுதியபோதிலும், காசுமிகையை அடைவதற்கு தேவையான தந்திரோபாயம் / வழிமுறைகளை அடையாணங்காண முடியாதுள்ளனர்.

**பொதுவான தவறுகள்:**

- தொடர்பில்லாத ” ர்த்திசெய்யாத விடைகளை எழுதுதல்.
- பகுதி (b) யில் காசுமிகை அடைவதற்கு தேவையான தந்திரோபாயம்/வழிமுறைகளை விபரிப்பதற்குப் பதிலாக “காசு மிகை” என்பதனை விபரித்துள்ளனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால வினாக்களை பயிற்சி செய்தலும், சுயகற்கை புத்தகம் மற்றும் தொடர்புடைய தொகுப்புக்களை வாசித்தலும்.
- குறுகியகால தொழிற்படு மூலதனத்தை மேம்படுத்துவதற்கு கடன்களை காரணிப்படுத்தல் (கயஉவழசஐபெ) நிலையான சொத்துக்களை குத்தகைக்குப் பெறுதல் போன்ற முறைகளை பரீட்சார்த்திகள் தெரிந்திருக்க வேண்டும்.

## வினா இல. 03

இந்த வினா, வரையறுக்கப்பட்ட உற்பத்திக் காரணிகள் உள்ளபோது இலாபத்தை உச்சப் படுத்துவதற்கு உத்தம உற்பத்திக் கலவையை கணிப்பிடும் அறிவை பரீட்சிக்கின்றது.

**பெறுபேறு:**

இந்த வினாவின் பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. உற்பத்திக் காரணியொன்றின் கிடைப்பனவு வரையறுக்கப்பட்ட நிலையில் உத்தம உற்பத்திக் கலவையை கணிக்கும் அறிவு பல பரீட்சார்த்திகளிடம் போதுமானதாக இல்லை.

**பொதுவான தவறுகள்**

- பங்களிப்பை கணித்தலில் நிலையான மேந்தலைகள் கவனத்திற் கொள்ளப்படக்கூடாது என்பதனை பல பரீட்சார்த்திகள் தெரிந்திருக்கவில்லை.
- பங்களிப்பை கணித்தலில் சில பரீட்சார்த்திகள் தவறான பெறுமதிகளை எடுத்திருந்தனர் (உதா: 255 க்கு பதிலாக 225). சிலர் எண்கணிதத் தவறுகள் விட்டிருந்தனர்.

இந்தத் தவறுகளுக்கான காரணம் உரிய கோட்பாடுகளை நன்கு விளங்கிக்கொள்ளாமையும், வினாவை கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளாமையும் எனலாம்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- சுயகற்கைப் பாடப்புத்தகத்திலுள்ள இதே வகையான வினாக்களை பயிற்சி செய்க.
- வினாக்களுக்கு விடையெழுத முன்னர் வினாக்களை நன்கு வாசித்து விளங்கிக்கொள்க. வினாக்களில் தரப்பட்ட பெறுமதிகளை விடைத்தாளில் கணிப்பீடுகளுக்கு பிரதிசெய்யும் போது மிகுந்த எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும்.
- உமது செய்கை முறைகளை தெளிவாகக் காட்டுக.

## வினா இல. 04

இந்த வினாவின் பகுதி (a) யில் தொழிற்படுத்திய மூலதனம் மீதான வருவாய் (ROCE) கணிப்பீடும், பகுதி (b) யில் ROCE இனைப் பயன்படுத்துவதின் அனுகூலங்களை கூறுமாறும் கேட்கப்பட்டது. ROCE யினை கணிப்பதற்கான சூத்திரம் கீழ்வருமாறு:

$$ROCE = \frac{\text{வட்டி, வரிக்கு முன் இலாபம் PBIT}}{\text{உரிமையாண்மை Equity + நடைமுறையல்லா பரிப்புக்கள்Non-current Liabilities}}$$

**பெறுபேறு:**

இந்த வினாவின் பெறுபேறுகள் சராசரி மட்டத்தில் காணப்பட்டன. பெரும்பாலானோர் தொழிற்படுத்திய மூலதனத்தை கணிப்பதற்கான போதிய அறிவினை கொண்டிருக்கவில்லை. அதாவது, கைக்கொள் இலாபம், ஏனைய ஒதுக்கங்கள், நீண்டகால கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டுமா என்பதனை தெரிந்திருக்கவில்லை.

**பொதுவான தவறுகள்:**

- பகுதி (a), ROCE இனை கணித்தலில் சிலர் வரிக்குப் பிந்திய இலாபத்தை எடுத்ததுடன், வேறு சிலர் குறிப்பிடு மூலதனத்தை மாத்திரம் பகுதியெண்ணாக எடுத்திருந்தனர்.
- பகுதி (b) அனேகமானோர் தொடர்பற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால வினாக்களையும் பிற ஒத்த வினாக்களையும் பயிற்சி செய்க.
- ROCE உட்பட ஏனைய விகிதங்கள் பற்றி தெளிவான இறிவை பெற்றுக் கொள்க.

<u>**பிரிவு B**</u>

## வினா இல. 05

பகுதி (a) யில் தரப்பட்ட விலை மற்றும் கேள்வி மட்டங்களில் நடப்பு இலாபம் மற்றும் எதிர்பார்க்கப்படும் இலாபம் ஆகியவற்றை காட்டும் அட்டவணை தயாரிக்குமாறும், பகுதி (b) யில் கம்பனியின் பொருத்தமான விலை மட்டத்தினை காணுமாறும் கேட்கப்பட்டது.

**பெறுபேறு:**

இந்த வினாவின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

**பொதுவான தவறுகள்:**

- அனேகமான பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்படும் கேள்வியை கணிக்காது, 70,000 மற்றும் 90,000 அலகுகளின் அடிப்படையில் இலாபத்தை கணித்திருந்தனர்.
- வினாவில் நடப்பு இலாபத்தை காட்டுமாறு தெளிவாக குறிப்பிட்டிருந்தபோதிலும், சில மாணவர்கள் நடப்பு இலாபங்களை கணிக்கவில்லை.

- பகுதி (b) யில் கம்பனிக்கான பொருத்தமான விலை மட்டத்தை காணுமாறு தெளிவாக கேட்கப்பட்டிருந்த போதிலும் கணிசமான பரீட்சார்த்திகள் விலை மட்டத்தை கணிக்காது ஏனைய கணிப்பீடுகளை மாத்திரம் செய்திருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால வினாக்களையும் சுயகற்கைப் பொதியிலுள்ள பிற ஒத்த வினாக்களையும் பயிற்சி செய்க.
- எப்போதும் உமது செய்கைகளை தெளிவாகக் காட்டுக.
- கணித வழுக்களை தவிர்த்து, கணிப்பீடுகளை திரும்ப சரிபார்க்குக.

## வினா இல. 06

பகுதி (a) யில் நெகிழ்வுப் பாதீட்டின் அடிப்படையில் தரப்பட்ட மாதத்திற்கான தொழிற்பாட்டுக் கூற்றினை (பாதீட்டுக் கட்டுப்பாட்டுக் கூற்று) எல்லைக் கிரயமிடல் முறையை பயன்படுத்தி தயாரிக்குமாறும், பகுதி (b) யில் பாதீட்டுக் கட்டுப்பாட்டு வரையறைகள் இரண்டை கூறுமாறும் கேட்கப்பட்டது.

**பெறுபேறு:**

இந்த வினாவின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

**பொதுவான தவறுகள்:**

- நெகிழ்ச்சிப் பாதீடு பற்றியும், தொழிற்பாட்டுக் கூற்றினை எவ்வாறு தயாரிப்பது என்பது பற்றியும் அனேகமான பரீட்சார்த்திகள் தெரிந்திருக்கவில்லை.
- அனேக பரீட்சார்த்திகள் நெகிழ்ச்சிப் பாதீட்டினை தயாரிக்காது, வினாவில் தரப்பட்ட பாதீட்டு மற்றும் உண்மைப் பெறுமதிகளை விடைத்தாளில் எழுதி முரண்களை அறிய முற்பட்டுள்ளனர்.
- சில பரீட்சார்த்திகள் முரண்களை கணித்திருந்த போதிலும் அவை சாதகமானவையா அல்லது பாதகமானவையா என குறிப்பிடவில்லை.
- சில மாணவர்கள் நெகிழ்ச்சிப் பாதீட்டினை தயாரிக்காது, முரண்களை கணிப்பதற்கு முரண் பகுப்பாய்வு முறையினை பயன்படுத்த முனைந்துள்ளனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- பாதீட்டுக் கட்டுப்பாடு பற்றி சுயகற்கைப் பொதியின் அடக்கங்கள் மற்றும் வினாக்களை நன்கு பாடமாக்குக.
- கடந்தகால வினாக்களையும் சுயகற்கைப் பொதியிலுள்ள பிற ஒத்த வினாக்களையும் பயிற்சி செய்க. இதனை ஒத்த வினாக்கள் கடந்த காலங்களில் திரும்பத்திரும்ப பரீட்சிக்கப்பட்டுள்ளன.
- பாதீடு தொடர்புபட்ட படிவமைப்புக்களை நன்கு தெரிந்து வைத்திருக்க வேண்டும்.
- முரண்களை கணிக்கும்போது (+) / (-) அடையாளங்களின் பயன்பாடு மற்றும் கணிதச் செம்மை பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## வினா இல. 07

இந்த வினாவின் பகுதி (a) யில் உரிமையாண்மைக் கிரயம், கடன் கிரயம் மற்றும் நிறையேற்றிய சராசரி மூலதனக் கிரயம் ஆகியவற்றின் கணிப்பீடு பற்றிய அறிவு பரீட்சிக்கப் பட்டது. பகுதி (b) யில் வங்கிக் கடன் மூலம் செயற்திட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதன் அனுகூலங்கள் இரண்டு வினவப்பட்டது. பகுதி (c) யில் நீண்டகால நிதியளிப்பு மூலங்களை தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய காரணிகள் பற்றி வினவப்பட்டது.

**பெறுபேறு:**

இந்த வினாவின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

பகுதி (a) யில் சாதாரண பங்கு மூலதனக் கிரயம், கடன் கிரயம் மற்றும் நிறையேற்றிய சராசரிக் கிரயம் ஆகிய கணிப்பீட்டில் செய்யவேண்டியது, உரிய சூத்திரத்தில் வினாவில் தரப்பட்ட பெறுமதிகளை பிரதியீடு செய்தல் மாத்திரமே. எனினும் பரீட்சார்த்திகளின் பெறுபேறு திருப்திகரமானதாக இருக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் மாத்திரம் பங்கிலாப வளர்ச்சி சூத்திரத்தை பயன்படுத்தி உரிமையாண்மைக் கிரயத்தை சரியாகக் கணித்திருந்தனர். வேறு சிலர் சரியான சூத்திரத்தை எழுதியிருந்த போதிலும், சரியான பெறுமதிகளை பிரதியீடு செய்தலிலும், சூத்திரத்தை கணிதரீதியாக தீர்த்தலிலும் தவறுகள் விட்டுள்ளனர்.

பகுதிகள் (b) மற்றும் (C) யின் செயற்பாடுகளும் மோசமாக இருந்தன. சிலர் இந்தப் பகுதிகளை முயற்சிக்கவெ இல்லை.

**பொதுவான தவறுகள்:**

- சிலர் உரிமையாண்மைக் கிரயக் கணிப்பீட்டில் பங்கிலாப வளர்ச்சி முறைச் சூத்திரத்தை பயன்படுத்தவில்லை.
- வளர்ச்சி வீதத்தை கூட்டுவதற்குப் பதிலாக சிலர் கீழே காட்டியவாறு வளர்ச்சி வீதத்தை கழித்தோ அல்லது பெருக்கியோ எழுதியிருந்தனர்.

  உதா:- $r_e = \frac{d_0\,(1+g)}{P_0} - g$

  $r_e = \frac{d_0\,(1+g)}{P} * g$
- சில மாணவர்கள் WACC க்குப் பதிலாக IRR மற்றும் NPV இனை கணித்திருந்தனர்.
- சிலர் ஏட்டுப் பெறுமதிகளை பயன்படுத்தி WACC யினை கணித்திருந்தனர்.
- சிலர் பங்கிலாப வளர்ச்சி வீதத்தை பிரயோகிக்கவே இல்லை.
- சில மாணவர்கள் சூத்திரத்தை சரியாக எழுதியிருந்த போதிலும் அதனை தீர்ப்பதற்கு தெரிந்திருக்கவில்லை. இது அவர்களின் கணித தேர்ச்சியின்மையை காட்டுகின்றது.
- பல மாணவர்கள் பகுதிகள் (b) மற்றும் (c) க்கு தொடர்பற்ற விடைகளை எழுதியுள்ளனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- கடந்தகால வினாக்களையும், பிற ஒத்த வினாக்களையும் பயிற்சி செய்க. இதனை ஒத்த வினாக்கள் கடந்த காலங்களில் திரும்பத்திரும்ப பரீட்சிக்கப்பட்டுள்ளன.
- WACC, IRR மற்றும் NPV சூத்திரங்களை சரியாகப் பிரயோகிக்க பழகிக்கொள்ளவும்.
- (+) / (-) ஆகிய குறியீடுகளை தீர்த்தலில் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.
- மூலதன மூலங்கள் மற்றும் மூலதனக் கிரயங்கள் பற்றிய கோட்பாடுகளை நன்றாக வாசித்து விளங்கிக்கொள்ள வேண்டும்.
- வினாக்களை வாசித்து முறையாக விளங்கிக்கொண்டு சரியான விடைகளை ஏழுதவும்.

## பிரிவு C

### வினா இல 08

பகுதி A யில் NPV மற்றும் IRR கணிப்பீடுகளை பயன்படுத்தி பழைய எந்திரமொன்றை பிரதியீடு செய்து புதிய எந்திரமொன்றினை கொள்வனவு செய்யும் திட்டத்தை மதிப்பாய்வு செய்யுமாறு கேட்கப்பட்டது.
பகுதி B விசேட கட்டளையொன்றினை ஏற்றுக்கொள்வதா என்பது பற்றியது.

**பெறுபேறு:**

இந்த வினாவின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருந்தன. அனேக மாணவர்கள் காசுப் பாய்வுகளை சரியாக இனங்கண்டுகொண்ட போதிலும், தேய்மானம் மற்றும் நிலையான கிரயங்கள் தொடர்பில் தவறுகள் விட்டுள்ளனர்.

**பொதுவான தவறுகள்:**

- சிலர் தேய்மானத்தை கணித்தலில் ஒடிவுப் பெறுமதியை கணக்கிற் கொள்ளவில்லை.
- சில பரீட்சார்த்திகளுக்கு காசுப்பாய்வில் தேய்மானத்தை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி தெரியவில்லை. சிலர் வருட நிலையானகிரயம் ரூபா 40 மில்லியன் முழுவதையும் தவறாக கழித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் தேய்மானப் பெறுமதி ரூபா 17.2 மில்லியனை சரியாக கணித்த போதிலும், காசுப்பாய்வினை கணிப்பதில் ரூபா 17.2 மில்லியன் மற்றும் எஞ்சிய நிலையான கிரயம் ரூபா 22.8 மில்லியனை வெவ்வேறாக கழித்துக் காட்டியிருந்தனர்.
- சிலர் ஆரம்ப முதலீடு மற்றும் ஒடிவுப் பெறுமதிகளுக்கு தவறான குறியீடுகளை (+ / -) குறிப்பிட்டிருந்தனர்.
- IRR கணிப்பில் சிலர் சூத்திரத்தில் சரியான பெறுமதிகளை பிரயோகிக்க தவறியுள்ளனர்.
- பகுதி (B) க்கு விடையளித்தலில் அனேக பரீட்சார்த்திகள் கணிப்பீடுகளை மாத்திரம் செய்திருந்ததுடன், தீர்மானத்தை காரணங்களுடன் மதிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செய்யவில்லை.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- காசு உட்பாய்வுகள் மற்றும் வெளிப்பாய்வுகளை உரிய முறையில் குறியீடு செய்தல் வேண்டும். உதாரணமாக காசு வெளிப்பாய்வுகளை அடைப்புக் குறியிட்டோ அல்லது சய குறியிட்டோ காட்டுவதுடன் காசு உட்பாய்வுகளை அடைப்புக் குறிகள் இன்றியோ அல்லது சக அடையாளமிட்டோ காட்டுதல் வேண்டும்.
- எப்போதும் உமது செயன்முறைகளை காட்டுவதுடன், எடுகோள்கள் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
- கடந்த கால மற்றும் பயிற்சி வினாக்களை நன்கு பயிற்சி செய்தல் வேண்டும்.
- தீர்மானம் அல்லது நிதிசார் சாத்தியத்தினை ***மதிப்பிடுக*** என்று வினாவில் கூறியிருப்பின், கணிப்பீடுகளின் அடிப்படையில் அதன் பெறுமதி, தன்மை மற்றும் இயலுமை பற்றி தெரியப்படுத்த வேண்டும்.
- வினா வினைச் சொற்களை நன்கு விளங்கிக்கொண்டு அதற்கு அமைய விடைகளை எழுதுதல் நன்மைபயக்கும்.

## வினா இல. 09

இந்த வினாவின் பகுதி (a) யில் நியம உறிஞ்சற் கிரமிடல் முறை மற்றும் முரண் பகுப்பாய்வு பற்றிய அறிவும் பகுதி (b) யில் உற்பத்தியை நிறுத்தும் தீர்மானப் பகுப்பாய்வு பற்றிய அறிவும் பரீட்சிக்கப்பட்டது.

**பெறுபேறு:**
இந்த வினாவின் பெறுபேறுகள் திருப்திகரமானதாக இருந்தன.

**பொதுவான தவறுகள்:**

- பகுதி (a) யின் உபபிரிவில் சில மாணவர்கள் உண்மையான இலாபத்திற்குப் பதிலாக பங்களிப்பினை கணித்திருந்தனர்.
- சிலர் இலாபத்தை கணித்தலில் முரண் பகுப்பாய்வில் பெற்ற விடைகளை பிரயோகித்து இருந்தனர்.
- ஒரு சில மாணவர்கள் மட்டும் அலகொன்றின் இலாபத்தை கணித்திருந்தனர்.
- சில மாணவர்களின் பிரயோக முறை சரியாக இருந்தபோதிலும், கணித வழுக்கள் காணப்பட்டன.
- சிலர், பகுதி (b) யில் முரண்கள் சாதகமானவையா அல்லது பாதகமானவையா எனக் காட்ட தவறியுள்ளனர்.
- அனேக மாணவர்கள் பகுதி (b) க்கு பதிலளிக்கையில் எடுகோள்கள் எதனையும் குறிப்பிடாது, பல்வேறு கணிப்பீடுகளை மேற்கொண்டிருந்தனர்.

**பரீட்சகரின் ஆலோசனைகள்:**

- வெவ்வேறு சந்தர்ப்பங்களில் முரண்கள் தொடர்புச் சூத்திரங்களை நன்கு பயிற்சிசெய்ய வேண்டும்.
- மாணவர்கள் அதிக புள்ளிகளை றெுவதற்கு மாற்றுவழிச் சந்தர்ப்ப் பகுப்பாய்வுகளில் சகல செயன்முறைகளையும் காட்டுதல் வேண்டும்.
- மாணவர்கள் தமது செயன்முறைகளுடன், எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
- முரண் பகுப்பாய்வில் சூத்திரங்களில் சரியான பெறுமதிகளை பிரதியிட வேண்டும்.
- கடந்த கால மற்றும் பயிற்சி வினாக்களை நன்கு பயிற்சி செய்தல் வேண்டும்.
- முரண்கள் மற்றும் தொடர்புடைய கிரயங்கள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவினை மேம்படுத்த முயற்சிக்குக.

வினாக்களின் வடிவம் மற்றும் படிமுறைகளை நன்கு விளங்கிக் கொள்வதற்கு கடந்த கால வினாக்கள் மற்றும் சுயகற்கைப் பொதியிலுள்ள வினாக்களை பயிற்சி செய்தல் கட்டாயமானது. அத்துடன், சூத்திரங்களை சரியாக எழுதுதல், பெறுமதிகளை பிரதியீடு செய்தல் மற்றும் கணிதச் செம்மை ஆகியன தொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டும். செயன்முறைகளை தெளிவாகக் காட்டுவதுடன், எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

\- - -

## பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளும் தன்மையை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்

1. பாடவிதான உள்ளடக்கங்களை நன்கு விளங்கிக் கொள்வதுடன், ஒவ்வொரு அலகின் எதிர்பார்க்கப்படும் அறிவு மட்டத்தினை நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

2. வினாக்களை நன்கு வாசித்து விளங்கிக்கொள்வதுடன், செயன்முறைகளை தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

3. எடுகோள்கள் எதுவும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடவேண்டும்.

4. கையெழுத்துக்கள் தெளிவாக இருப்பதுடன், விடைகளை உரியமுறையில் இலக்கமிட வேண்டும். விடைத்தாள்களை சமர்ப்பிக்க முன்னர் சரிபார்த்தல் அவசியம்.

5. வினாத்தாள்களில் தரப்படும் அறிவுறுத்தல்களை சரியாக கடைப்பிடிக்கவும்.

6. கடந்தகால வினாத்தாள்கள் மற்றும் அவற்றின் மாதிரி விடைகளை நன்கு அவதானித்தல் அறிவு, திறமை மற்றும் அனுபவத்தை மேம்படுத்த உதவும். ஒத்த வடிவம் மற்றும் கட்டமைப்பை கொண்ட வினாக்கள் எதிர்கால வினாத்தாள்களிலும் இடம்பெறக்கூடும்.

7. சுயகற்கைப் பாடப்புத்தகத்தினை வாசித்தலும் அதிலுள்ள உதாரணக் கணிப்பீடுகளை மனதில் நிறுத்துதலும் மிக முக்கியமானதாகும்.

8. இந்தப் பாடம் தொடர்புபட்ட புத்தகங்கள், உரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய பதிப்பீடுகளை வாசிக்க வேண்டும்.

9. பரீட்சைகளில் கால முகாமைத்துவம் மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு வினாவுக்கும் ஒதுக்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் செலவு செய்யவேண்டிய நேரத்தை மதிப்பீடு செய்துகொள்ள வேண்டும்.

10. பரீட்சைக்கு உரிய தயாரிப்புக்களுடனும், மிகுந்த நம்பிக்கையுடனும் தோற்றவேண்டும்.

- * * * -